பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 94

வெள்ளிக்கிழமை
28 பெப்ரவரி 2025

மாசி 16 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

அரசியல் மாற்றம் அவசியம்

» 02

கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி

## உடைகளின் கூராய்வு அறிக்கை நீதிமன்றத்தில் நேற்றுச் சமர்ப்பிப்பு!

முல்லைத்தீவு, பெப்ரவரி 28

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் மீட்கப்பட்ட உடைகளில், தோட்டாக்கள் துளைத்த மற்றும் சந்தேகத்துக்கு இடமான அடையாளங்கள் காணப்படுகின்றன என்று முல்லைத்தீவு சட்டமருத்துவ அதிகாரி வாசுதேவாவால் நீதிமன்றத்தில் அறிக்கையிடப்பட்டுள்ளது.

☞ 11





ஊதிய முரண்பாடுகள் எதிரொலி

## நாடளாவிய ரீதியில் தாதியர்கள் போர்!

கொழும்பு, பெப். 28
மருத்துவ ஊழியர்கள் மற்றும் தாதியர்களுக்கான மேலதிக நேரக் கொடுப்பனவுகள் மற்றும் ஊதிய உயர்வு என்பவற்றை வலியுறுத்தி நாடாளாவிய ரீதியில் அரச மருத்துவமனைகளில் நேற்றுப் போராட்டம் இடம்பெற்றது.

☞ 12

## தமிழர்களின் நம்பிக்கையை காப்பாற்றுக

யாழ்ப்பாணம், பெப். 28
அரசாங்கத்தின்மீது ஈழத் தமிழ் சகோதரர்கள் வைத்துள்ள நம்பிக்கையைக் காப்பாற்றுவதற்கு அரசாங்கம் முயல வேண்டும்

☞ 11

## குற்றவியல் நீதியை மறுக்கின்றது அரசு!

கஜேந்திரகுமார் எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 28
உண்மைக்கும், நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழுவை அமைப்பதன் ஊடாக குற்றவியல் விசாரணையையும், குற்றவியல்

☞ 11

வடக்கு, கிழக்கு மாகாணங்களில்

## மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் தொடர் கண்காணிப்பு வளையத்துள்!

ஐ.நா. விசேட அறிக்கையாளர் சுட்டிக்காட்டு

» 11

அத்துமீறிய மீன்பிடிக்கு எதிராக

## தீவக மீனவ அமைப்புகள் நேற்றுப் பெரும்போராட்டம்

யாழ்ப்பாணம், பெப். 28
இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடியைக் கட்டுப்படுத்துமாறு வலியுறுத்தி தீவக மீனவ அமைப்புகளின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்டக் கடற்றொழிலாளர் அமைப்புகள் இணைந்து நேற்றுப் பெரும்

☞ 11



மாகாணசபை

## தேர்தல் நிச்சயம்

கொழும்பு, பெப். 28
மாகாணசபைத் தேர்தல் வெகுவிரைவில் நடத்தப்படும் என்று தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் நீதி அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

☞ 12



## மனித உரிமை பேரவையில் அரசியல் நிகழ்ச்சி நிரல்கள்

கூறுகிறார் ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, பெப். 28
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை, அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு அமையவும், இரட்டை நிலைப்பாட்டுடனும்தான் செயற்பட்டுவருகின்றது. ஆதலால், இலங்கையின் மனித உரிமை மீறல்கள் குறித்த விசாரணை

☞ 11

செம்மணி மனித எச்சங்கள்

## வழக்கு இன்று விசாரணைக்கு!

யாழ்ப்பாணம், பெப். 28
செம்மணியில் மீட்கப்பட்ட மனித எச்சங்கள் தொடர்பான வழக்கு யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் இன்று விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்

☞ 11

முச்சந்தி முராரி



'நீதியை மறுக்கிறதும் பிறகு அதை மறைக்கிறதும் உவைக்கு புதுசில்லை பாருங்கோ'

யாழ்ப்பாணம் போதனாவில்

## மருத்துவர்கள் நேற்று தொழிற்சங்கப் போர்!

நோயாளர்கள் அவதி

யாழ்ப்பாணம், பெப். 28
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று முதல் தொழிற்சங்க

☞ 12

யாழ். போதனாவில் இடம்பெறும்

## தொழிற்சங்கப் போராட்டம் விரைவில் முடிவுக்கு வரும்

பணிப்பாளர் நம்பிக்கை

யாழ்ப்பாணம், பெப். 28
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில், மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினரால் முன்னெடுக்கப்பட்டுள்ள தொழிற்சங்க நடவடிக்கைகள் விரை

☞ 12

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28.02.2025 வெள்ளிக்கிழமை

## ஜே.வி.பி.யின் ஆயுதங்கள் எங்கே?

ஜே.வி.பி. அரச படைகளிடம் இருந்து கைப்பற்றிய 2,136 ஆயுதங்களை பாதுகாப்பு அமைச்சிடம் ஒப்படைக்க வில்லை என்று நாடாளுமன்ற உறுப்பி னர் தயாசிறி சுட்டிக்காட்டியுள்ளார். (ம)

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 27.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4002 |
| ஆங்கில எழுத்து | O |
| வெற்றி இலக்கங்கள் | 16 62 66 73 |
| விசே. எழுத்து | O |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 27.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1069 |
| வெற்றி இலக்கினம் | துலாம் |
| வெற்றி இலக்கங்கள் | 12 15 16 45 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 27.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 028 |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கங்கள் | 4 7 4 6 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 27.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2108 |
| ஆங்கில எழுத்து | N |
| சுப்பர் இலக்கம் | 12 |
| வெற்றி இலக்கங்கள் | 12 17 18 30 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 27.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5760 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கங்கள் | 6 1 4 0 7 9 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 27.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1790 |
| ஆங்கில எழுத்து | B |
| வெற்றி இலக்கங்கள் | 18 45 65 79 |
| விசேட எழுத்து | P |

# அரசியல் அணுகுமுறையில் முதலில் மாற்றம் அவசியம்

### முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

**கொழும்பு, பெப்.28**

**அரசியலமைப்பில் மறுசீரமைப்பை ஏற்படுத்துவதற்கு முன்னர் நாட்டின் அரசியல் சூழ்நிலையிலும், அரசியல் தலைவர்களின் அரசியல் அணுகு முறையிலும் மாற்றம் ஏற்படவேண்டும் என்று தெரிவித்துள்ளார் முன் னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க.**

புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பாக முன்னாள் சபா நாயகர் கரு ஜயசூரிய தலைமையிலான சமூக நீதிக்கான தேசிய இயக்கம் கொழும்பில் கடந்த செவ்வாய்க்கிழமை நிகழ்வொன்றை ஏற்பாடு செய்திருந்தது. அந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அரசியல் கட்சிகள் பொறுப்பற்றவையாகவும், தேசிய நலன்கள் தொடர்பில் சிந்திக்காதவையாகவும், அடுத்த தேர்தலில் என்ன செய்யலாம்? வெல்வோமா, தோற்போமா எனச் சிந்திப்பவையாகவுமே இருக்கின்றன.

இந்த நிலைமையில் நாம் புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தை எவ்வாறு செய்யப்போகின்றோம்? முன்னைய அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட சிறந்த திட்டம் ஒன்று இடைநிறுத்தப்பட்டாலும் அவர்கள் வருந்தப் போவதில்லை.

இலங்கையைப் பொறுத்தமட்டில் முதலாவதாக அரசியல் நெறிமுறைகள் மாற்றமடைய வேண்டும்.

நாம் நாடாளுமன்றத்தின் தன்மையை முழுமையாக மாற்றியமைக்கவேண்டும். இப்போது நாடாளுமன்றத்தில் அங்கம் வகிப்போரில் பெரும்பான்மையானோர் அரசியலமைப்பு உருவாக்க முயற்சிகளை நிராகரித்தவர்களே. இல்லாவிட்டால் அவர்களது கட்சி அதை நிராகரித்துள்ளது. அவ்வாறிருக்கையில் தற்போது மட்டும் இவர்களால் அதை எவ்வாறு செய்யமுடியும் என எனக்குத் தெரியவில்லை- என்றார். (எ-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 27.02.2025 | வியாழக்கிழமை | 0468 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| J | 0 7 0 6 8 3 | |

| Super Ball DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 27.02.2025 | வியாழக்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 2734 | V | 40 45 47 65 |

| சனிதா DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 27.02.2025 | வியாழக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| V | 51 52 66 76 | 4895 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | தினம் |
| 27.02.2025 | வியாழக்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
| 0631 | 01 20 32 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 27.02.2025 | வியாழக்கிழமை | |
| சிம்மம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 17 25 36 53 | 4446 |

| KAPRUKA DLB | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 27.02.2025 | வியாழக்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| B | 24 | 04 29 31 43 | 1910 |

| அத கோடிபதி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 27.02.2025 | வியாழக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| H | 26 28 67 72 | 2560 |

## ரணில் இந்தியா பயணம்

கொழும்பு, பெப். 28

'உலகளாவிய விசேட முன்னேற்றங்கள்' குறித்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று வியாழக்கிழமை இந்தியா சென்றுள்ளார். உலகளாவிய முக்கிய இராஜதந்திரிகளின் பங்கேற்புடன் இன்று வெள்ளிக்கிழமை புதுடில்லியில் இந்தக் கலந்துரையாடல் ஆரம்பமாகவுள்ளது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பிரதம விருந்தினராகப் பங்கேற்கவுள்ள இந்தக் கலந்துரையாடலில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன், கனடாவின் முன்னாள் பிரதமர் ஸ்டீவன் ஹாபர், அவுஸ்திரேலியாவின் முன்னாள் பிரதமர் டோனி எபொட் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதன்போது தென்னாசியா தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிறப்புரையாற்றவுள்ளார். (ச-இ)

## கொலைக்குப் பின்னர் நகை வாங்கிய செவ்வந்தி

கொழும்பு, பெப். 28

கணேமுல்ல சஞ்சீவ கொலையில் மூளையாகச் செயற்பட்டவராக அடையாளம் காணப்பட்டுள்ள இஷாரா செவ்வந்தி கொலைக்குப் பின்னர் களுத்துறை நகரிலுள்ள ஒரு நகைக்கடையில் 5 இலட்சம் ரூபா மதிப்புள்ள தங்கநகைகளை வாங்கியிருப்பது தெரியவந்துள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை கைதுசெய்யப்பட்ட பிரதான சந்தேகநபர் செவ்வந்தியின் தாய் மற்றும் சகோதரரை எதிர்வரும் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ச-இ)

## மின்னுற்பத்திச் செலவு வறட்சியால் அதிகரிப்பு

### மின்சாரசபை தெரிவிப்பு

கொழும்பு, பெப். 28


அதிக வெப்பம் மற்றும் எரிபொருள் எண்ணெய் ஆலைகளின் செயற்பாடு ஆகியவற்றால் மின்னுற்பத்திச் செலவுகள் அதிகரித்து வருவதாக இலங்கை மின்சாரசபை தெரிவித்துள்ளது.

நீர்த்தேக்க மட்டங்கள் குறைவடைந்துவருவதால் வாகனங்கள் மூலமான நீர் விநியோகம் அதிகரித்துள்ளது.

அத்துடன் நுரைச்சோலை மின்உற்பத்தி நிலையம் முழுத்திறனிலும் இயங்குகிறது. அதேவேளை நீர் மின்சாரம் பகல்நேர மின்உற்பத்தியில் 20 வீதமும் இரவுநேர மின் உற்பத்தியில் 40 வீதமும் பங்களிக்கிறது என்றும் மின்சாரசபை சுட்டிக்காட்டியுள்ளது. (ச-இ)

## தனிவழி செல்வதில் சுமந்திரன் விடாப்பிடி

### சுரேஷ் சுட்டிக்காட்டு



யாழ்ப்பாணம், பெப். 28

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளருமான எம்.ஏ.சுமந்திரன் தொடர்ந்து தனிவழியில் செல்லும் முடிவில் மாற்றங்கள் இன்றியே பயணிக்கின்றார் என்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அவர் இன்று நேற்று அல்ல, இரண்டு வருடங்களின் முன்னரும் இதே கொள்கையிலேயே இருந்தார். இன்றும் அதே முடிவுடன் தான் அவர் இருக்கின்றார்.

தமிழ்மக்களைப் பொறுத்தவரை அனைவரும் ஓரணியாகத் திரளவேண்டும் என்பது அவர்களுடைய தேவையாக இருக்கின்றது. அதனை அனைவரும் புரிந்துகொண்டு ஓரணியில் திரள்வது தொடர்பாகப் பணிகளை முன்னெடுத்துள்ளோம். தமிழரசுக் கட்சி தனித்துப் போட்டியிடவேண்டுமென்றால் அது அவர்களின் முடிவு-என்றார். (ச-125)

## 43 யானைகள் ஜனவரியில் பலி

கொழும்பு, பெப். 28

2025 ஜனவரியில் மனித - யானை மோதல்களால் சுமார் 43 யானைகள் உயிரிழந்துள்ளன என்று சுற்றுச்சூழல் அமைச்சர் கலாநிதி தம்மிக படபெந்தி தெரிவித்துள்ளார்.

கடந்த பத்து ஆண்டுகளில் சுமார் 3,527 யானைகள் உயிரிழந்துள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடைமுறைச் சாத்தியத்துக்கமைய தேர்தல் சட்டத்தில் திருத்தம் தேவை

## தேர்தல்கள் ஆணையாளர் தெரிவிப்பு

**கொழும்பு, பெப்.28**

**உள்ளூராட்சிமன்ற அதிகாரசபைகளின் செயற்பாடுகள் என்னவென்பது தொடர்பில் தெளிவற்றத்தன்மை காணப்படுகிறது. நடைமுறைக்குச் சாத்தியமான வகையில் தேர்தல்கள் சட்டம் திருத்தம் செய்யப்பட வேண்டும் என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

அரசியலமைப்பின் பிரகாரம் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாகத் தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுப்போம். தேர்தலை நடத்தும் திகதி அனைவருக்கும் சாதகமான வகையில் அமையும். உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகள் என்ன என்பதும், தெரிவுசெய்யப்படும் உறுப்பினர்களின் வகிபாகமும் தற்போது கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது. ஆகவே இந்த விடயம் குறித்து விசேட அவதானம் செலுத்தப்படவேண்டும். தேர்தல் முறைமை மீது நாட்டு மக்கள் நம்பிக்கை கொள்ளவேண்டும். அதற்கமைவாக அரசியல் தரப்பினர்கள் செயற்படவேண்டும் என்பதை வலியுறுத்துகிறோம்-என்றார். (எ-இ)



# அரசியலமைப்பு குழுவில் சத்தியலிங்கம்

கொழும்பு, பெப். 28

இலங்கை நாடாளுமன்றத்தின் அரசியலமைப்பு அலுவல்கள் குழுவின் உறுப்பினராக நாடாளுமன்ற உறுப்பினர் பத்மநாதன் சத்தியலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார். இலங்கை நாடாளுமன்றத்தின் அரசியலமைப்பு அலுவல்கள் பற்றிய விடயங்களைக் கையாள்வதற்கான குழு, சபாநாயகர் ஜகத் விக்ரமரத்னவால் நியமிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகரைத் தவிசாளராகக் கொண்ட குறித்த குழுவில் பிரதமர் ஹரிணி அமரசூரிய, சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான ப. சத்தியலிங்கம், சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார, நிஹால் அபேசிங்ஹ ஆகியோர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். (ச-இ)

கராத்தேபோட்டி

# சுண்டுக்குளி மாணவி வெண்கலம் வென்றார்

யாழ்ப்பாணம், பெப். 28

2024 ஆம் ஆண்டுக்கான தேசியமட்ட கராத்தே சுற்றுப்போட்டியில் வடக்கு மாகாணம் சார்பாகப் பங்குகொண்ட 14-15 வயதுப் பிரிவில் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி சதர்சன் ஜோய் அக்ஷ்யா வெண்கலப்பதக்கம் வென்றுள்ளார். இலங்கை கராத்தே சம்மோனத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட இந்தப் போட்டி இம்மாதம் 11ஆம் திகதி கொழும்புபண்டாரகம உள்ளக அரங்கில் நடைபெற்றது. (ச-22)

# வரும் தேர்தலில் தமிழர்கள் அரசுக்குப் பாடம் கற்பிப்பர்

## சாணக்கியன் சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 28

பொறுப்புக்கூறல் விடயத்தில் கடந்தகால அரசாங்கங்கள் போலவே தேசிய மக்கள் சக்தியும் செயற்படுகின்றது. இதற்கான பதிலடியை தமிழ் மக்கள் அடுத்த தேர்தலில் வழங்குவார்கள் என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜெனிவா மாநாட்டில் பங்கேற்றுள்ள வெளிவிவகாரஅமைச்சர் பல விடயங்களைக் கூறியுள்ளார். எனினும், பொறுப்புக் கூறலுக்கான பொறிமுறை பற்றி அவர் எதுவும் கூறவில்லை. ஆனால் கடந்தகால அரசாங்கங்கள் போல நீங்களும் அதேவேலையைத்தான் செய்கின்றீர்கள் என்பது தெட்டத்தெளிவாகத் தெரிகின்றது. புதிய அரசியலமைப்புக் கொண்டுவரப்படும் என உறுதியளித்திருந்தீர்கள்? அது எப்போது வரும்? அதன்ஊடாக தமிழர்களுக்கு அதிகாரப்பகிர்வு வழங்கப்படுமா? என்பது பற்றித் தெளிவுபடுத்துங்கள்.

பொறுப்புக்கூறல் விடயத்தில் எவ்வித முன்னேற்றமும் இல்லை. அதற்கான பதிலடி அடுத்த தேர்தலில் அரசாங்கத்துக்குக்கொடுக்கப்படும்-என்றார். (ச-44)

# சிவகங்கை சேவை 3 நாள்கள் இரத்து!

யாழ்ப்பாணம், பெப். 28

வங்கக் கடலில் நிலவும் மோசமான வானிலை காரணமாக நேற்றுமுன்தினம் முதல் இன்றுவரையான மூன்று நாள்கள் நாகைப்பட்டினம் - காங்கேசன்துறை பயணிகள் கப்பல் போக்குவரத்து சேவை இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்ட இந்தக் கப்பல் சேவை கடந்த 22 ஆம் திகதி மீண்டும் ஆரம்பமாகியது. இந்தநிலையில் சீரற்ற காலநிலை காரணமாக மீண்டும் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

நாளை முதலாம் திகதி முதல் கப்பல் போக்குவரத்துச் சேவை வழமைபோல் இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)




'ஒருத்தனை ஏமாத்தவேணும் என்டால் முதலில அவன்ர ஆசையைத் தூண்டிவிடோணும்' இப்பிடியொரு வசனம் சதுரங்க வேட்டைப் படத்தில வரும். கோடியில ஒரு வசனம் அது. இஞ்ச எல்லாருமே அப்பிடி அடுத்தவனுக்கு ஆசையைத் தூண்டி விட்டு அதில குளிர்காயத்தான் நிக்கினம். இப்ப எங்கட பெடியள், பெட்டையளுக்கு படிப்புக்கு பிறகு வாற ஒரெயொரு ஆசை வெளிநாட்டுக்குப் போறதுதான். முந்தியெண்டால் ஒரு ஊரில எங்கையாவது ஒரு வீட்டிலதான் வெளிநாட்டுக்காரர் இருப்பினம். இப்ப எல்லாவீட்டிலையும் நாலைஞ்சு வெளிநாட்டுக்காரர் தான். அதால மிச்சமுள்ளவையும் என்னதான் இஞ்ச படிச்சாலும் பிறகு 'வெளிநாடு,வெளிநாடு' எண்டு பிரம்மை பிடிச்சவைமாதிரி அந்தக் கனவிலையே திரிவினம். இந்தக் கனவையும், வெளிநாட்டு ஆசையையும் மூலதனமாக்கி அதாலையே பணக்காரரான கனபேர் எங்களுக்குள்ள இருக்கினம்.

இப்ப ஏஜென்ஸி மூலமா வெளிநாட்டுக்குப் போறது பயங்கரக் கஷ்டம். அதால அங்க வேர்க் பெர்மிட் எடுத்தோ, இல்லாட்டி அங்க உள்ள பள்ளிக்கூடங்கள், கம்பஸ்களில படிக்கிறத்துக்கு அட்மிசன் எடுத்தோ இஞ்சையுள்ளவை போய்க்கொண்டிருக்கினம். இப்பிடி வேர்க் பெர்மிட் எடுக்கிறதுக்கும், கம்பஸ்களில அட்மிசன் வாங்கிறதுக்கும் 'ஐ.ஈ.எல்.ரி.எஸ்.' எக்ஸாம் எடுத்து நல்லமார்க்ஸ் வாங்கியிருக்கோணும். ஆனால் அதில பந்தி வாசிச்சு விடை எழுதிறதும், குரலில ஒரு விசயத்தைச் சொல்ல, அதைவைச்சுக் கேள்விப்பேப்பரில உள்ள கேள்வியளுக்கு விடை கண்டுபிடிக்கிறதும் கடும் கஷ்டமாம். இந்த எக்ஸாமில பாஸ் பண்ணினால் விசா எடுக்கிற அலுவலில பாதிக்கிணறு தாண்டினமாதிரி. ஆனால் உந்த எக்ஸாமில பாஸ் பண்ணுறதும் , கொம்புள்ள குதிரையைக் கண்டுபிடிக்கிறதும் ஒண்டுதான். அதால இந்த 'ஐ.ஈ.எல்.ரி.எஸ்.' சோதினையில பாஸ் பண்றதுக்காக என்ன ரிஸ்கும் எடுக்கிறதுக்கு எங்கட புள்ளிங்கோப் பெடி ,பெட்டையள் ரெடி.

அவையின்ர இந்த ஆசையை வைச்சுக் சில கொம்பனியள் காசு பாக்குதுகள். 'ஒரு கிழமையில ஐ.ஈஎல்.ரி.எஸ்.' பாஸ் பண்ணலாம்' என்ட தூண்டிலைப் போட்டு, அந்த ஸ்பெஷல் வகுப்புக்கு ஒராளிட்ட இருந்து 50 ஆயிரம், 40 ஆயிரம் எண்டு வாங்கிக் கொண்டு நீர்கொழும்பு, கொழும்பு எண்டு கூட்டிக்கொண்டு போகினம். அங்க புறொய்லர் கோழியள் மாதிரி ஒரு கட்டடத்துக்கையே ஒரு கிழமையும் இருத்திவைச்சு, முந்தின பாஸ் பேப்பர்களைச் செய்யச் சொல்லி விடுகினமாம். காலமையில இருந்து இரவு வரைக்கும் அங்க போனவை இப்பிடி பாஸ்பேப்பரோட மாரடிக்க வேண்டியதுதான். அந்தக் கேள்வியளை எப்பிடிச் சுகமாச் செய்யலாம். என்னென்ன வழியளைக் கையாண்டா விடையைச் சுகமாக் கண்டுபிடிக்கலாம், குறிப்பிட்ட நேரத்துக்குள்ள என்னெண்டு முழுக்கேள்விக்கும் விடை எழுதலாம் எண்டதுகளைத்தானே அந்தக் கோச்சிங் காம்பில சொல்லிக் குடுக்கோணும். ஆனால் இவையள் சும்மா பாஸ் பேப்பரைக் குடுக்கிறதோட தங்கள் அலுவலை முடிக்கினம். அப்பிடி பாஸ்பேப்பரைச் செய்யிறதுக்கு ஏன் அம்பதாயிரம் கட்டி அங்க போய் இருக்கோணும்? அதைவிட வீட்டில இருந்தே படிக்கலாமே.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட வரைஞர்களைப் பதிவு செய்தல் - 2025

யாழ் மாநகரசபையில் கட்டட அனுமதிக்கான வரைபடங்களை வரைந்து சமர்ப்பிக்க விரும்பும் பட வரைஞர்கள் (புதிதாக பதிவு செய்ய விரும்புபவர்கள் மற்றும் பதிவினை புதுப்பித்துக்கொள்ள விரும்புபவர்கள்) கீழ் வரும் விடயங்களினைக் கருத்திற் கொண்டு பதிவுகளை மேற்கொள்ளலாம் என்பதுடன் மேலும் உரிய ஆவணங்களுடன் அலுவலக நாட்களில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 3.00 மணி வரை 14.03.2025 ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் பதிவுகளை பௌதிக திட்டமிடல் பகுதியில் மேற்கொள்ளலாம் என்பதனை சகல பட வரைஞர்களுக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

- **NVQ - 5 in Drafting Technology (Buildings)** கற்கை நெறியினை பூர்த்தி செய்துள்ளவர்கள் மற்றும் **NVQ - 5 Drafting Technology (Buildings)** கற்கை நெறியினை தொடர்ந்து கற்பவர்கள் அதனை உறுதிப்படுத்தும் ஆவணத்தினை சமர்ப்பித்து பதிவினை மேற்கொள்ள முடியும்.
- மேற்குறிப்பிட்ட நிபந்தனைக்கு அமைவாக 2025 படவரைஞர் பதிவுக்கு ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் விண்ணப்பிக்க வேண்டிய அவசியமில்லை.
- மேற்குறிப்பிட்ட நிபந்தனைக்கு அமைய பதிவினை மேற்கொண்டவர்கள் மேற்குறிப்பிட்ட திகதிக்குள் பதிவுகளைப் புதுப்பிக்கத் தவறும் படவரைஞர்களும் புதிதாக பதிவுகளை மேற்கொள்ளாத பட வரைஞர்களும் 2025 ஆம் ஆண்டிற்கான படவரைஞராக யாழ் மாநகர சபையில் தொழிற்பட முடியாது.

**குறிப்பு :**

- படவரைஞராக பதிவு செய்வதற்கான விண்ணப்ப படிவ கட்டணம் ரூபா 1000.00 + vat
- உரியவாறு ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு படவரைஞராக பதிவு மேற்கொள்வதற்கு தெரிவு செய்யப்படுபவர்களுக்கான கட்டணம் ரூபா 2000.00 +vat.

**மாநகர ஆணையாளர்.**
**யாழ் மாநகர சபை.**

## துப்புரவுப்பணி

யாழ்ப்பாணம் ,பெப்.28


கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்துக்கு அண்மையில் அமைந்துள்ள கீரிமலை சித்தர்பீட வளாகம், சிவ தொண்டர்கள், சிவமங்கையர்களால் இன்று வெள்ளிக்கிழமை மாலை 3 மணி முதல் துப்புரவு செய்யப்படவுள்ளது.

தொண்டுப் பணிகளில் ஈடுபட முன்வரும் சிவனடியார்கள் இன்று மாலை 3 மணிக்கு வளாகத்தில் ஒன்று கூடுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுகொண்டுள்ளனர். (ச-25-125)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 31.01.2025 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்

### [illegible]ர் தம்பு இராமதாஸ் (ரகு)




அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 28.02.2025 வெள்ளிக்கிழமை காலை 07.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும். வீட்டுக்கிருத்திய நிகழ்வு எதிர்வரும் 02.03.2025 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பத்தலைவர் அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு எமது இல்லத்துக்கு வருகை தந்தவர்களுக்கும். தொலைபேசி, சமூக வலைத்தளங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் துண்டுப்பிரசுரங்கள், பதாகைகள் மூலம் அஞ்சலி செலுத்திய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**வாளித் கொழிற்சாலை ஒழுங்கை,**
**மாவிட்டபுரம்.**

**குடும்பத்தினர்.**
**077 027 9693**

## மரண அறிவித்தல்



### அப்புத்துரை மோகன்ராஜ்

தோற்றம் 20.09.1960 — மறைவு 27.02.2025

யாழ்ப்பாணம் பெருமாள்கோயிலடியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ்சை வசிப்பிடமாகவும் கொண்ட அப்புத்துரை மோகன்ராஜ் நேற்று (27.02.2025) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை - பாக்கியலட்சுமி தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்ற இராசமலரின் அன்புக் கணவரும், நிசாந்தனின் அன்புத் தந்தையும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.02.2025) வெள்ளிக்கிழமை இல.190, ரத்தத்தறோட், களுதாவளை மாத்தளையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மாத்தளை இந்து மயானத்தில் பிற்பகல் 3.00 மணியளவில் தகனம்செய்யப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.190, ரத்தத்த றோட்,
களுதாவளை,
மாத்தளை. (cs.57615) (N-1)

தகவல்:
குடும்பத்தினர்
077 441 940[illegible]

## மரண அறிவித்தல்

தோற்றம் 05 . 09 . 1930 — மறைவு 27 . 02 . 2025



### திரு. விஸ்வலிங்கம் தர்மராஜா

(ஓய்வு பெற்ற பிரதம லிகிதர்)

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் சித்தங்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வலிங்கம் தர்மராஜா அவர்கள் நேற்று (27.02.2025) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் - முத்துப்பிள்ளை (இரத்தினம்) தம்பதியரின் ஏகபுதல்வனும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும், கமலாம்பிகையின் அன்புக் கணவரும், நாகநந்தினி, ரிஷீந்திரன், ஸ்ரீந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவகுமார், யசோதா, ஜெகதா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான பாக்கியம், தெய்வநாயகியின் அன்புச்சகோதரரும், கேசவன், வைஷ்ணவி, சாதனா, மிதுனா, தானியா, லிவியா, லியானா, அபேதன், மனுவித்யா ஆகியோரின் அன்புப்பேரனும். சிந்துரா, ஆர்யா, ஆரபி, ஆதியா ஆகியோரின் அன்புப்பூட்டனுமாவார்.

ஈமைக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

**நாகநந்தினி : 0718161243**
**ரிஷீந்திரன் : +17 326423620**
**ஸ்ரீந்திரன் : +41 792188128**

(CR/44442) J-1

**தகவல் :**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# நீதியென்பது கானல் நீரா?

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அமர்வில் கலந்துகொண்டுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், தங்களது அரசாங்கம் தேசிய ஒற்றுமை, நல்லிணக்கம் ஆகியவற்றை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டு செயலாற்றும் என்று கூறியிருக்கின்றார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டேர்க்கின் இலங்கை தொடர்பான வாய்மொழிமூல அறிக்கை எதிர்வரும் மார்ச் மாதம் 3 ஆம் திகதி வெளியிடப்படவுள்ள நிலையில், இலங்கையின் நிலைப்பாட்டை ஜெனிவாவில் வெளிப்படுத்தியிருக்கின்றார் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராகவும், இலங்கையின் அனுசரணையுடனும் ஏற்கனவே தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தாலும், அந்தத் தீர்மானங்களில் கூறப்பட்ட விடயங்கள் எவையும் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை. கடந்த காலங்களில் சில விடயங்கள் செயற்படுத்தப்பட்டிருந்த போதும், அவை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையையும், சர்வதேச நாடுகளையும் சாந்தப்படுத்தும் வகையில் ஒப்புக்குச் சப்பாணியாகவே செயற்படுத்தப்பட்டிருந்தன. இறுதிப்போரில் நடந்த மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக உள்ளக விசாரணைகளே முன்னெடுக்கப்படும் என்று இலங்கை தொடர்ச்சியாகக் கூறிவந்தாலும், போர் முடிந்து 15 வருடங்கள் கடந்துள்ளபோதும், எவ்விதமான காத்திரமான நடவடிக்கைகளும் இலங்கையால் முன்னெடுக்கப்படவில்லை.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களில் இருந்து தப்பித்துக்கொள்வதற்கான வாக்குறுதிகளை அள்ளிவீசுவதும், அதன்பின்னர் அவற்றைக் காற்றில் பறக்கவிடுவதுமே இலங்கையின் வாடிக்கையாகவிருக்கின்றது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையும், சர்வதேசநாடுகளும் தீர்மானங்களை நிறைவேற்றிய பின்னர், அதிலுள்ளவற்றை நிறைவேற்றுவதற்கு அழுத்தங்களை வழங்கத் தவறுவதால் இலங்கையின் இந்தப் போக்கு காலங்காலமாகத் தொடர்ந்துகொண்டிருக்கின்றது. பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களால் இதுவரையில் எந்தப் பயனும் கிட்டவில்லை என்றே கூற வேண்டியிருக்கின்றது. தற்போதுள்ள அரசாங்கமும் கடந்த காலங்களில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை நிராகரித்திருக்கின்றது. கடந்த ஒக்ரோபர் மாதம் அமைச்சரவைப் பேச்சாளராகக் கருத்துத் தெரிவித்திருந்த தற்போதைய வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அமர்வில் சமர்ப்பிக்கப்படும் எந்தவொரு தீர்மானத்தின் நகல் வடிவையும் இலங்கை தொடர்ந்து எதிர்க்கும் என்று கூறியிருந்தார். உள்நாட்டுப் பொறிமுறை மூலம் நல்லிணக்கம் உட்பட மனித உரிமைகள் பிரச்சினைக்கு அரசாங்கம் தீர்வுகாணும் என்றும் கூறியிருந்தார்.


கடந்த காலங்களில் இலங்கையில் உருவாக்கப்பட்ட ஆணைக்குழுக்கள், காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் என்பன பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்கு முனையாமல், குற்றமிழைத்தவர்களைப் பாதுகாக்கும் வகையிலேயே செயற்பட்டிருக்கின்றன. அவ்வாறான செயற்பாடுகளால் உள்ளகப் பொறிமுறை மூலமாக நீதியைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்ற நம்பிக்கை தமிழ் மக்கள் மத்தியில் இல்லாது போயிருக்கின்றது. தற்போதைய அரசாங்கம் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகத்துக்குக் கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்படும் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் கூறியிருக்கின்றபோதும், பாதிக்கப்பட்டோருக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் அதன் செயற்பாடுகள் அமையும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. கடந்தகாலங்களைப் போன்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையையும், சர்வதேச நாடுகளையும் திசைதிருப்பி அழுத்தங்களைக் குறைத்துக்கொள்ளக் கையாளும் இலங்கையின் யுக்தி என்றே இதைக் கருதமுடியும். இலங்கையின் வழமையான இந்த யுக்திக்குள் சிக்காமல் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையும், சர்வதேச நாடுகளும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்குத் தேவையான அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளொரு நல்வார்த்தை

கல்வி இல்லாத மேதை
சுரங்கத்தில் உள்ள வெள்ளி போன்றவர்.

—பெஞ்சமின் பிராங்க்ளின்—




சஞ்சீவ கொலை எதிரொலி

## நவீனமயப்படுத்தப்படும் சிறைச்சாலைகள்

கொழும்பு, பெப். 28

**நீதிமன்றத்தினுள் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி, கணேமுல்ல சஞ்சீவ கொல்லப்பட்ட சம்பவத்தின் பின்னர் சிறைச்சாலைகளில் நவீன தொழில்நுட்ப வசதிகள் மூலம் பாதுகாப்பைப் பலப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

இதற்கமைய, நாட்டிலுள்ள அனைத்துச் சிறைச்சாலை களிலும் விசேட பாதுகாப்பு வேலைத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தநடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, தொலைபேசி தொடர்பு தடுப்பு சாதனங்களின் நவீனமயமாக்கலும் சேர்க்கப்பட்டுள்ளது. சிறைச்சாலைகளில் ஏற்கனவே ஜாமர் கருவிகள் பொருத்தப்பட்டுள்ள நிலையில், கட்டடங்களின் தன்மை காரணமாக தொலைபேசி இணைப்புகளை முழுமையாக முடக்கமுடிய வில்லை. இதனால் சிறைச்சாலை களில் உள்ள கைதிகள் தொலைபேசித் இணைப்புகள் மூலம் வெளித் தரப்பினருடன் உறவுகளை வளர்த்துக் கொண்டுள்ளனர். அதற்கமைய ஜாமர் கருவிகள் உள்ளிட்ட பாதுகாப்பு அமைப்புகளைச் சீரமைக்கு மாறு சிறைச்சாலைத் திணைக்களத்துக்கும் பாதுகாப்பு அமைச்சு பணிப்புரை விடுத்துள்ளது. (ச-இ)

## மகளிர் வாரம் பிரகடனம்

கொழும்பு, பெப். 28

மகளிர் தினத்தை முன்னிட்டு மார்ச் 2 ஆம் திகதி முதல் 8 ஆம் திகதி வரையான ஒருவார காலப்பகுதியை மகளிர் வாரமாக அமைச்சரவை பிரகடனம் செய்துள்ளது.

மகளிர் வாரத்தை முன்னிட்டு தேசிய, மாகாண, மாவட்ட, பிரதேச மட்டங்களில் பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்று பிரதமர் தெரிவித்துள்ளார். (ச-25, 6)

## சஞ்சீவவின் சிறையறையில் கைபேசி மீட்பு

கொழும்பு, பெப். 28

நீதிமன்றத்துக்குக் கொண்டு வரப்படுவதற்கு முன்பு கணேமுல்ல சஞ்சீவ தடுத்துவைக்கப்பட்டிருந்த சிறையிலிருந்து ஒரு கையடக்கத்தொலைபேசி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கணேமுல்ல சஞ்சீவகொலைதொடர்பாக சிறைச்சாலைத் தரப்பு மேற்கொண்டு வரும் விசாரணை களின்படி குறித்த தகவல் வெளியாகியுள்ளது. (ச-இ)


## தேசிய வீடமைப்பு அதிகாரசபைக்கு புதிய தலைவர்

கொழும்பு, பெப். 28

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் புதிய தலைவராக அரவிந்த ஸ்ரீநாத நியமிக்கப்பட்டுள்ளார் நேற்றுமுன்தினம் புதன்கிழமை அவர் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

களனிப் பல்கலைக்கழகத்தின் வர்த்தகப்பிரிவில் பட்டம் பெற்ற இவர் வணிக நிர்வாகத்தில் முதுகலைப் பட்டமும் பெற்றுள்ளார்.

அரவிந்த ஸ்ரீநாத இலங்கையின் பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தில் கற்றுள்ளதுடன் பல தனியார்துறை நிறுவனங்களிலும் பணியாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)



## கடும் வறட்சியால் 12,308 பேர் பாதிப்பு

கொழும்பு, பெப். 28

நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக 2 ஆயிரத்து 295 குடும்பங்களைச் சேர்ந்த 12 ஆயிரத்து 308 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. களுத்துறை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களிலேயே வறட்சி காரணமாக அதிகளவான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒலிபெருக்கிகளால் மக்கள் அந்தரிப்பு

### அதிகாரிகள் அலட்சியம்

யாழ்ப்பாணம், பெப். 28
யாழ்.மாவட்டத்தில் ஒலிபெருக்கிகளின் அதிகூடிய சத்தங்களால் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் உட்பட மக்களின் அன்றாடப்பணிகள் சீர்குலைவதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் அதிகரித்துள்ள ஒலிபெருக்கிப் பாவனை தொடர்பில் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் இதனை மீறுவோர்மீது கடுமையான சட்டநடவடிக்கை பாயும் எனவும் யாழ்.மாவட்டச் சுற்றாடல் பாதுகாப்புக் குழுக்கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

எனினும் இதனைக் கட்டுப்படுத்துவதற்கு அதிகாரிகள் அசமந்தப் போக்கையே கடைப்பிடிக்கின்றனர். அண்மையில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதிகளிலுள்ள ஆலயங்களில் 15க்கும் அதிமான ஒலிபெருக்கிகள் பொருத்தப்பட்டு இரவு முதல் அதிக இரைச்சலுடன் ஒலி எழுப்பப்பட்டது.

இதனால் அருகிலுள்ளவர்கள் மட்டுமன்றி அயல் கிராமங்களிலுள்ள மக்களும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். இது குறித்து பொலிஸாருக்கு அறிவித்தும் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (ச-25,27)

# அத்துமீறி நுழைவதற்கு இந்தியாவில் போராட்டம்

### இது நியாயமா? வடக்கு மீனவர்கள் கேள்வி

**யாழ்ப்பாணம், பெப். 28**
**இந்திய மீனவர்கள் எங்களுடைய கடற்பகுதிக்குள் அத்துமீறி உள்நுழைந்து மீன்பிடிப்பதற்குத் தமிழகத்தில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர். இது எவ்வாறு நியாயமானது? என்று குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கத்தின் ஆலோசகர் மரியநாயகம் இமானுவேல் கேள்வியெழுப்பியுள்ளார். யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,
எங்களுடைய கடற்பரப்புக்குள் வந்து தொழில் செய்வதற்கும், எங்களுடைய கடல் வாழ் உயிரினங்களைக் கொள்ளை அடிப்பதற்கும், எங்களுடைய இயற்கை கடல்வளங்களை அழிப்பதற்கும் உரிமை உள்ளவர்கள் போல் இந்தியமீனவர்களின் செயற்பாடு காணப்படுகிறது. நாடுகளுக்கிடையே தரை எல்லைகளைப் போல் கடல் எல்லைகளும் வரையறை செய்யப்பட்டுள்ளன. ஒரு நாட்டின் அனுமதிகேட்டு நுழைவதற்கே இந்த எல்லைகள் வரையறை செய்யப்படுகின்றன. ஆனால் இந்திய மீனவர்கள் எந்தவிதமான இடையூறும் இன்றி எந்தவிதமான சிக்கலும் இன்றி எங்களுடைய கடல் எல்லைக்குள் அத்துமீறி எங்களுடைய கடற்றொழில் உபகரணங்களை அழிப்பதோடு எங்களுடைய மீன்வளங்களையும் அழிக்கின்றனர். இதற்கு போராட்டம்வேறு நடத்துகின்றனர்- என்றார். (ச-22,23)

# தொழிற்சந்தை

பளை, பெப். 28
மனிதவலு, வேலைவாய்ப்புத் திணைக்களம் மற்றும் பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகம் ஆகியவற்றின் இணை ஏற்பாட்டில், தொழிற்சந்தை நிகழ்வு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 தொடக்கம் மதியம் 2 மணி வரை நடைபெறவுள்ளது. தொழில் வாய்ப்பை எதிர்பார்த்துள்ள இளைஞர் யுவதிகளுக்கான தொழில் வழங்குகின்ற நிகழ்வும், பாடசாலைக் கல்வியை நிறைவுசெய்துள்ள மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டமும் இடம்பெறவுள்ளன.

நிகழ்வில் ஆர்வமுடைய 16 வயதுக்கு மேற்பட்ட இளைஞர், யுவதிகள் கலந்துகொள்ளமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25,9)

# மனைப்பொருளியல் கண்காட்சி

யாழ்ப்பாணம்,பெப்.28
வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன், கரைச்சிப் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் க. பாவானந்தன் தலைமையில், கரைச்சிப் பிரதேச செயலாளர் பிரிவின் மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் மனைப்பொருளியல் கண்காட்சி அம்பாள்குளம் பொதுநோக்கு மண்டபத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது. இதன்போது பயிற்சிபெற்ற மாணவிகளின் ஆடைகள், கேக் வகைகள், கைவினைப் பொருள்கள் மற்றும் உணவுவகைகள் என்பன காட்சிப்படுத்தப்பட்டன. (ச-41-113)



சிவராத்திரியை முன்னிட்டு நடத்தப்பட்ட திருக்கேதீச்சரப் பண்ணிசைப் போட்டியில் வரணி இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலய மாணவி சி. கோவர்த்தனி முதலிடம் பெற்றார். (ச-25,9)

# கலாசாரப் பண்புகளை சந்ததிக்குப் புகட்டுங்கள்

### வேலணைப் பிரதேச செயலர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், பெப். 28
கலை, கலாசாரப் பண்பாடுகள் அடுத்த சந்ததிக்கும் கடத்தப்பட வேண்டியது அவசியம். அந்தச் செயற்பாட்டை வலுப்படுத்தும் பொறுப்பு ஒவ்வொரு கலாமன்றங்களுக்கும் இருக்கின்றது என்று வேலணைப் பிரதேச செயலர் கை. சிவகரன் தெரிவித்துள்ளார்.

வேலணை துறையூர் ஐயனார் கலாமன்றத்தின் ஒருங்கிணைப்பில் ஐயனார் சனசமூக நிலைய கலையரங்கில் நடைபெற்ற சிவராத்திரிதின நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,
எமது அடையாளங்கள் பாதுகாக்கப்படுவது காலத்தின் கட்டாயமாகும். அதனடிப்படையில் தற்போதிருக்கும் எமது கலை கலாசாரப் பண்பாடுகளைப் பாதுகாத்து, அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் கருவிகளாக இளம் சமூகத்தினர் ஊக்குவிக்கப்பட்டு வளர்க்கப்படவேண் டும். இந்தப் பொறிமுறையை உருவாக்குவதனூடாகவே எமது இருப்பின் அடையாளங்களை அடுத்த சந்ததிக்கும் கொண்டு செல்லப்படுவதை உறுதிசெய்யமுடியும் - என்றார். (ச-27)


# யாழில் கழிவுப்பொருள்கள் பணம் செலுத்தி கொள்வனவு

யாழ்ப்பாணம்,பெப். 28
மல்லாகம் பிரதேசத்திலுள்ள 'பெறுமதி' மீள்சுழற்சித் திண்மக் கழிவுப்பொருள்கள் கொள்வனவு நிலையத்தில், பொதுமக்களிடமிருந்து மீள்சுழற்சி செய்யப்படக்கூடிய பொருள்கள் பணம் செலுத்திக் கொள்வனவு செய்யப்படுகின்றன.

பிளாஸ்ரிக் போத்தல்கள், கடதாசிப்பொருள்கள், பியர் ரின், காட்போட், தகரம், பொலித்தீன், கண்ணாடிப் பொருள்கள், சில்வர், ரயர் போன்றவை கொள்வனவு செய்யப்படுகின்றன.

ஆளுநரின் அனுமதி கிடைக்கப்பெற்றதன் அடிப்படையில் இந்தச் செயற்றிட்டம் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

அதேவேளை கடந்த வருடத்தின் அதிக பெறுமதியான பொருள்களை வழங்கிய முதல் மூன்று வாடிக்கையாளர்கள் கௌரவிக்கப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ச-25)



# கசிப்பு விற்பனை; சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம், பெப். 27
கோப்பாய் - கோண்டாவில் பகுதியில் நீண்டகாலமாக கசிப்புக் காய்ச்சி விற்பனையில் ஈடுபட்ட சந்தேகநபரொருவர் பொலிஸாரால் கடந்த செவ்வாய்க்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடமிருந்து ஒன்றரை லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-25,27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம் , பெப். 28

யாழ். சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியால யத்தின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி அதிபர் ந.ராமதாஸ் தலை மையில் வித்தியாலய மைதானத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் கு.செந்தில் குமரன், சிறப்பு விருந்தினர்க ளாக யாழ். சங்கானை சிவப்பிரகாச இந்து ஆரம்ப பாடசாலை அதிபர் சி.சர்வேஸ்வரன் ,கொழும்பு தொழிலதிபரும் பழைய மாணவருமான ஆ.வடிவழகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர் .

(ச-22,159)

# மாவை சேனாதிராஜாவுக்கு பிரிட்டனில் அஞ்சலி

லண்டன், பெப். 28



மறைந்த மூத்த அரசியல் தலைவரும், இலங் கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவரு மான மாவை சேனாதிராஜாவின் 31 ஆம் நாள் நினைவு நிகழ்வு பிரித்தானியாவில் நடைபெறவுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஐக்கிய இராட்சியக் கிளையின் ஏற்பாட்டில் இன்று 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிமுதல் இரவு 9 மணி வரை இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது. (ச-25,27)


## வேலையாட்கள் தேவை

கட்டுமான நிறுவனம் ஒன்றிற்கு கீழ்வரும் வேலையாட்கள் தேவை.

**மேசன், கூலி, ஏறாசோ/ மாபிள் வேலை செய்யக்கூடியவர்கள்.**

(CS/2627) J-1

**072 564 7173**


## பெறுகை அறிவித்தல் - இரத்துச்செய்தல்
## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
## சபை நிதி - 2024/ 2025

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் சார்பாக 24.02.2025 ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட மேற்படி பெறுகை அறிவித்தல் முழுமையாக இரத்துச் செய்யப்படுகின்றது என்பதனை இத்தால் அறியத்தரப்படுகின்றது.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை,**
சுழிபுரம். 28.02.2025

(CR/44441) J-1

# INVITATION FOR BID 2025/02
# Regional Directorate of Health Service Jaffna.

1. The Chairman, Regional Procurement Committee, on behalf of the Regional Director of Health Services, Regional Directorate of Health Services, Health village pannai, Jaffna now invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
3. Qualification' requirements are indicated in section 4 of the Procurement Document. Additional details are provided in the Section 5 of the Procurement Document.
4. Interested bidders may obtain further information from address given below in 5 and inspect the bidding documents at the same place on any working days from during the document issuing period mentioned in table below between 09:00 hrs and 15:00 hrs.
5. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Regional Directorate of Health Services, health village pannai Jaffna. (T.P:0212227889, Fax: 0212220822) from 9.00 a.m. to 15.00 p.m. during the period mentioned in the table upon payment of non-refundable fees as mentioned in the table. The method of payment should be by cash.
6. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman, Regional Procurement Committee, Regional Directorate of Health Services, Health village pannai, Jaffna on or before 10.30 a.m at the date mentioned in the table below. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
7. Pre-Bid Conference will be held at Conference Hall, Regional Directorate of Health Services, Health village pannai, Jaffna on commencing at 2.30 P.M on the date mentioned in the table.
8. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Table

| CATEGORY II | Document Issuing/Purchasing Period | | | From 28.02.2025 until 12.03.2025 | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | Pre-Bid Conference | | | At 2.30 P.M on 07.03.2025 | | | |
| | Closing and Opening of Bids | | | At 10.30 A.M on 14.03.2025 | | | |
| Bid ID | Description of Work | Estimated Cost | Contract Period | Grade Required | | Required Bid Security | |
| | | (Rs.) In Million (without VAT) | | | Non-Refundable Fees | Security Amount | Validity Period |
| NP/04/41/2025/REC/W/01 | Improvement work at DH Nainativu. | 2.77 | 86Days | C8 (Buildings) | 3,500.00 | 28,000.00 | Till 30.05.2025 |
| NP/04/41/2025/REC/W/02 | Connecting work to New OPD and Ward at DH Nainativu. | 3.86 | 96Days | C8 (Buildings) | 3,500.00 | 39,000.00 | Till 30.05.2025 |
| NP/04/41/2025/REC/W/03 | Water Supply Works for RDHS Office New Building (Sump,Tank and Septic tank) | 1.60 | 76Days | C9 (Buildings) | 1,500.00 | 16,000.00 | Till 30.05.2025 |
| NP/04/41/2025/REC/W/04 | Modification Works of Public Health Unit at RDHS Office Jaffna. | 0.86 | 67Days | C9 (Buildings) | 1,500.00 | 9,000.00 | Till 30.05.2025 |

**Chairman**
**Regional Procurement Committee**
**Regional Directorate of Health Service,**
**Jaffna.**

(CR/44433) J-1


# பெண் பராமரிப்பாளர் தேவை

ஊரிக்காடு வல்வெட்டித்துறையில் இயங்கிவருகின்ற வல்வை முதியோர் இல்லத்திற்கு பெண் பராமரிப்பாளர் மற்றும் சமையல் வேலை செய்யக்கூடியவர் தேவை.
உணவு தங்குமிட வசதி இலவசம்.
தகுந்த சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

**தொடர்புகளுக்கு:**

**077 810 6857, 077 154 2067, 021 226 5551**

(cr.44435) (N-1)


## கேள்வி அறிவித்தல்
## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
## சபை நிதி - 2025 (கட்டம் I)

வலிகாமம் கிழக்குப் பிரதேசசபையின் சார்பாக 2025.02.24 ஆம் திகதி உதயன் மற்றும் தினக்குரல் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட மேற்படி கேள்வி அறிவித்தல் முழுமையாக இரத்து செய்யப் படுகின்றது என்பது இத்தால் அறியத்தரப்படுகின்றது.

**தலைவர்,**
**உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை**
**புத்தூர்.** 2025.02.28

## பிரசுரம் செய்யப்பட்ட கேள்வி அறிவித்தலினை ,ரத்து செய்தல்
## சபை நிதி 2025 ( கட்டம் 1)
## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.

வலி தெற்கு பிரதேச சபையின் சார்பாக 25.02.2025 திகதிய (செவ்வாய்க்கிழமை) இப் பத்திரிகையில் பிரசுரம் செய்யப்பட்ட மேற்படி கேள்வி அறிவித்தல் முழுமையாக இரத்து செய்யப்படுகிறது என்பது இத்தால் அறியத் தரப்படுகிறது.

**தலைவர்**
**உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு,**
**வலி தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.** 28.02.2025

(CR/44438) J-1

## யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை
## பதவி வெற்றிடம்
### பதவி எழுதுநர் - ச. கு. இ 302/11
### பதவிகளின் எண்ணிக்கை -02

சபையில் வெற்றிடமாகவுள்ள எழுதுநர் பதவி சம்பள குறியீட்டு இல. 302/11க்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தகுதியானவர்களிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**சம்பள அளவுத்திட்டம்**

19280-190*10
23280-210*10

கூட்டுறவு வேலை ஆணைக்குழுவில் 2/2022 இலக்க சுற்று நிருப்பபடியான

வாழ்க்கைச் செலவுப்படி, விசேட படி, ஆகியவற்றுடன் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய படிகளும் வழங்கப்படும்.

**கல்வித் தகைமை**

அ.) கூட்டுறவு ஊழியர் 12 ஆவது சம்பளத் திட்டப்பதவியில் எழுதுநர்/ கணக்காய்வு எழுதுநர் / காசாளர்/ கணினிப்பக்க உருவாக்குநர் பதவியொன்றில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/

கூட்டுறவு ஊழியர் 13ஆவது சம்பளத் திட்டப் பதவியில் மேற்படி பதவியொன்றில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ.) அங்கீகரிக்கப்பட்ட தொழில் நுட்ப நிறுவனமொன்றில் / பயிற்சி நிறுவனமொன்றில் கணக்கியல்/ கணக்குப்பதிவியல் தொடர்பான பயிற்சி நெறிக்கான சான்றிதழ்

அல்லது

இ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திர பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனமொன்றில் கணக்கியல் துறைப் பதவியொன்றில் ஆகக்குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்/

க.பொ.த.உயர்தரப்பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனமொன்றில் கணக்கியல்துறைப் பதவியொன்றில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்.

**பொதுவான நிபந்தனைகள்**

- கல்வித் தகைமை சான்றிதழ்களின் பிரதிகள்
- சேவைத் தகைமை சான்றிதழ்களின் பிரதிகள்
- மேலதிக கல்வித் தகைமை சான்றிதழ்களின் பிரதிகள்
- தொழிற்கல்வித்தகைமை சான்றிதழ்களின் பிரதிகள்
- அனுபவத் தகைமை சான்றிதழ்களின் பிரதிகள் என்பவற்றினை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
- விண்ணப்ப முடிவுத்திகதி-15.03.2025
- விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

செயலாளர்,
யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை
கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபம்
இல. 12, கே.கே. எஸ் வீதி.யாழ்ப்பாணம்.

விண்ணப்பப் படிவத்தை சபையில் ரூபா 50.00 செலுத்தி பெற்று விண்ணப்பிக்கவும்

**செயலாளர்,**
**யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை.**

(cr.44436) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
09
11
1945



மறைவு
27
02
2025

திரு.
## கந்தையா இராஜேந்திரன்

யாழ் செட்டிகுறிச்சி, பண்டத்தரிப்பிணை பிறப்பிடமாகவும், 30/1 A, IBC வீதி கொழும்பு -06 னை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. கந்தையா இராஜேந்திரன் அவர்கள் நேற்று **(27.02.2025)** வியாழக்கிழமை அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான வீரகத்தி கந்தையா- பார்வதி தம்பதியினரின் அன்பு மகனும், இராஜ இராஜேஸ்வரியின் அன்புக்கணவரும், மச்சகந்தி, பிருந்தை, ஜனார்த்தனன், ரிஷிகேஷன் ஆகியோரின்அன்புத்தந்தையும், T.பிரதீபன், A.பிரதீபன், பிரவீணா ஆகியோரின் அன்பு மாமனாரும், அக்ஷயா, மதுஷாலி, காவ்யா, ஆரபி, தேவ்சரண் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் **28.02.2025** வெள்ளிக்கிழமை மு.ப.**8.00** மணி முதல் பி.ப **1.00** மணிவரை பார்வைக்கு வைக்கப்பட்டு, பி.ப. **1.00** மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று பிப.**3.00** மணிக்கு கல்கிசை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

**இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

தகவல்
குடும்பத்தினர்

இல: **30/1, A, IBC** றோட்.
வெள்ளவத்தை, கொழும்பு **-06**
**0773857273 /0774342314**



ஜெசாக் நிறுவனத்தின் அனுசரணையுடன் பிரதேச செயலக சிறுவர் பெண்கள் பிரிவு உத்தியோகத்தர்களால், 'மாற்றத்துக்கான பாதை'எனும் தலைப்பில் சிறுவர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு புலோப்பளை றோ.க.த.க.பாடசாலையில் நேற்று வியாழக்கிழமை நடத்தப்பட்டது. (ச-25,9)

## ஆண்டுவிழா

யாழ்ப்பாணம், பெப். 28

மட்டுவில் மோகனதாஸ் சன சமூகநிலையத்தின் 77 ஆவது ஆண்டுவிழா மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுமைதானத்தில்நாளை சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு நடைபெறவுள்ளது. விழாவில் சிறுவர்களுக்கான நிகழ்வுகள் மற்றும் மாணவர்கள் பெரியோர்களுக்கான பாரம்பரிய விளையாட்டுகள் நடைபெறவுள்ளதுடன் பரிசளிப்பும் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-25, 131)

## சமூக ஊடகங்களுக்கு நாம் வரி விதிக்கவில்லை

கொழும்பு, பெப். 28

இணையம் மூலம் வெளிநாட்டு நாணயம் சம்பாதிப்பவர்களுக்கு வரி விதிக்கவில்லை என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

மாறாக முந்தைய அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட வரியைக் குறைத்ததாக பொருளாதார பிரதி அமைச்சர் ஹர்ஷன சூரியப்பெரும தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முந்தைய அரசு இந்த சேவைகளுக்கு 30% வரி விதித்ததாகவும், தனது அரசு ஆட்சிக்கு வந்த பிறகு, அது 15 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## செயலமர்வு

கிளிநொச்சி, பெப். 28

கிளிநொச்சி மாவட்டத்தைச்சேர்ந்த பாடசாலைகளின் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் பயிலுநர்களுக்கான இரு நாள் செயலமர்வு கிளிநொச்சி மாவட்டத் திறன் விருத்தி மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெற வுள்ளது. இலங்கை தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனமும் வடமாகாண விளையாட்டுத்திணைக்களமும் இந்தச் செயலமர்வை ஏற்பாடுசெய்துள்ளன.

செயல மர்வில் விளை யாட்டு மருத்துவம் தொடர்பான விளக் கங்கள் வழங்கப்பட வுள்ளன. (ச-25,113)

# மரண அறிவித்தல்

## பொன்னையா பரமேஸ்வரன்


(ஓய்வு பெற்ற வரணி உப அஞ்சல் அலுவலக உத்தியோகத்தர்)

வரணி வடக்கு, தம்பானைப் பிறப்பிடமாகவும் கரம்பைக்குறிச்சி, வரணியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா பரமேஸ்வரன் நேற்றுமுன்தினம் (26.02.2025) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தையா - மற்றும் சின்னாச்சிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும், பிறேமாவதியின் அன்புக் கணவரும், ஐங்கரன், வினோதா, அஜந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், மீரா, குணசீலன், ஜனாளினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அனிஸ், அர்வின், ஆருஷ் , ராகிதன், அஸ்வின், அகர்ஷன், அபின்ஷா , அபிஷாந் ஆகியோரின் அன்புப் பேரனும், கணேசரத்தினம், காலஞ்சென்றவர்களான சிதம்பரநாதன், உமாராணி மற்றும் யோகராணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், ஞானாம்பிகை, கிருஷ்ணமூர்த்தி, புஷ்பராணி ஆகியோரின் மைத்துனரும், ஜனக்சன், ஜனகன், ஜெனித்தா ஆகியோரின் மாமனாரும் திருநீபன், கிருபா ஆகியோரின் சித்தப்பாவும் சுரேகா, சுதர்சன், சுசீவன் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.02.2025) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வடவரணி ஐயன் கண்டி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர் , நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.



மண்ணில்
[illegible].10.1953

விண்ணில்
26.02.2025

**கரம்பைக்குறிச்சி,**
**வரணி.**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**
**077 5821 657**

(cr.44437) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## வெளிநாட்டுப் பயணங்களுக்கான
# முன்னாள் ஜனாதிபதிகளின் செலவுப்பட்டியல் வெளியீடு

கொழும்பு, பெப். 28

மஹிந்த ராஜபக்ச உட்பட முன்னாள் ஜனாதிபதிமார் வெளிநாட்டுப் பயணங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை முறைகேடாகப் பயன்படுத்தியமை தொடர்பான செலவுப் பட்டியலை பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார்.



நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற பாதீடு தொடர்பான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய பிரதமர் இதுதொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதியொருவர் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ளக்கூடாதென நான் கூறவில்லை. ஆனால் எமது நாட்டில் இருந்த அரசியல் கலாசாரத்தால் கடந்தகாலங்களில் பணம் வீண்விரயமாக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் வெளிநாட்டுப் பயணங்களுக்காக 2010 முதல் 2014 வரையான காலப் பகுதியில் 3 ஆயிரத்து 572 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

2015 முதல் 2019 வரையான காலப்பகுதியில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வெளிநாட்டுப் பயணங்களுக்காக 384 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

2020 முதல் 2022 வரையான காலப்பகுதியில் கோத்தாபய ராஜபக்சவின் வெளிநாட்டுப் பயணங்களுக்காக 126 மில்லியன் ரூபாவும், 2023 முதல் 2024 வரையான ஒரு வருட காலப்பகுதியில் ரணில் விக்கிரமசிங்கவின் வெளிநாட்டுப் பயணங்களுக்காக 533 மில்லியன் ரூபாவும் செலவிடப்பட்டுள்ளது.

2024 செப்ரெம்பர் முதல் 2025 பெப்ரவரி வரையான காலப்பகுதியில் தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் வெளிநாட்டுப் பயணங்களுக்கு 1.8 மில்லியன் ரூபாவே செலவிடப்பட்டுள்ளது. ஜனாதிபதி மூன்று நாடுகளுக்குச் சென்றுள்ளார். 11 பேர் மட்டுமே பங்கேற்றுள்ளனர். மக்கள் மீது சுமைகளைத் திணிக்காது, இருக்கின்ற வளங்களைக்கொண்டு சிறப்பாகச் செயற்படுவதே எமது நோக்கம் என்றார். (ச-4)

# 'புட் போர்ட்டில்' பயணித்தாரா ஜனாதிபதி அநுரகுமார?
## திலித் ஜெயவீர கேள்வி

கொழும்பு, பெப். 28



நாடாளுமன்றத்தில் வெளியிடப்பட்ட ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் வெளிநாட்டுப் பயணச் செலவு புள்ளி விவரங்கள் நம்பத்தகாதவையாக உள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் திலித் ஜெயவீர நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் பயணச் செலவுகளில் பெரும் வீழ்ச்சியைக் காட்டும் வகையில் நேற்று நாடாளுமன்றத்தில் வெளியிடப்பட்ட புள்ளிவிவரங்களுக்குப் பதிலளித்தபோதே அவர் இதனைச் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி வெறும் 1.8 மில்லியன் ரூபாயில் மூன்று நாடுகளுக்கு எவ்வாறு விஜயம் செய்ய முடிந்தது?

"வெளிநாட்டு பயணச் செலவுகள் குறைக்கப்பட்டுள்ளதாகப் பிரதமர் கூறுகிறார். இவ்வளவு குறைந்த தொகையில் மூன்று நாடுகளுக்கு அவர் எப்படி பயணம் செய்தார் என்று எனக்குத் தெரியவில்லை.

ஒருவேளை அவர் கால்பலகையில் (புட் போட்) பயணம் செய்தாரா?

கடந்த ஐந்து மாதகாலப் பதவிக்காலத்தில், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இந்தியா, சீனா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகளுக்குப் பயணம் செய்தார்.

செலவுகளைக் குறைப்பது மட்டும் இலாபத்தை ஈட்டித்தராது. வருவாய் ஈட்டுவதில் அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும் பட்ஜெட் பற்றாக்குறையை எவ்வாறு சமன் செய்வது? எங்கள் கடனை எவ்வாறு திருப்பிச் செலுத்துவது? நாம் எம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளக்கூடாது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்றைய இராசிபலன்

**மேடம்:** மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்படக்கூடும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் குழப்பம் ஏற்படும். பிள்ளைகள் பிடிவாதம் பிடிப்பார்கள்.

**இடபம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதர வகையில் சிறு சிறு சங்கடங்கள், அவர்களுக்காக வீண்செலவுகளும் ஏற்படக்கூடும். எதிர்பாராத செலவுகளால் கையிருப்பு கரையும்.

**மிதுனம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உடல் ஆரோக்கியம் மேம்படும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். சிலருக்கு தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படக்கூடும். பிற்பகலுக்கு மேல் எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**சிம்மம்:** உற்சாகமான நாளாக அமையும். எதிர்பார்க்கும் காரியங்கள் சாதகமாக முடியும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சிலருக்கு விருந்து விசேஷங்களில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கன்னி:** பணப்புழக்கம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். தொலைதூரத்திலிருந்து நீண்டநாள்களாக எதிர்பார்த்த நல்ல தகவல் இன்று வந்துசேரும். அலுவலகத்தில் அதிகாரிகளின் பாராட்டுகள் உற்சாகம் தரும்.

**துலாம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். முக்கியமான முடிவு ஒன்றை துணிச்சலுடன் எடுப்பீர்கள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும். கலகலப்பான சூழ்நிலை காணப்படும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடாமல் வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். சில சங்கடங்கள் ஏற்படும். உறவினர்களுக்காக செலவுசெய்ய நேரிடும். அலுவலகப் பணிகளில் கூடுதல் கவனம் தேவை.

**தனுசு:** எதிர்பார்த்த உதவி கிடைக்கும். காரியங்கள் முடிவதில் சிறு தாமதம் ஏற்படக்கூடும். மாலையில் மனதுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும்.

**மகரம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். மனதில் தைரியம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். இளைய சகோதரர்கள் உங்கள் ஆலோசனையைக் கேட்டுவருவார்கள். ஆதாயம் உண்டாகும்.

**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கைக்குவரும். எதிர்பாராத செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. சகோதரர்கள் பணம் கேட்டுவருவார்கள். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும்.

**மீனம்:** பொறுமையும் சகிப்புத்தன்மையும் அதிகம் தேவைப்படும். சிலருக்கு ஆன்மீகத்தில் நாட்டம் அதிகரிக்கும். தாயின் அன்பும் ஆதரவும் மனதுக்கு உற்சாகம் தரும். உறவினர்கள் வகையில் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும்.

# நிவாரணங்களை வழங்காது நிபந்தனை போடும் அரசு!

## திஸ்ஸ அத்தநாயக்க விசனம்

**கொழும்பு, பெப்.28**

**விவசாயிகளுக்கு எவ்வித நிவாரணத்தையும் வழங்காமல் நெல்லை தமக்கு வழங்கினால் மட்டுமே உரத்தை வழங்குவோம் என்று அரசாங்கம் நிபந்தனையிடுகின்றது. ஆணவத்தில் ஆட்சி செய்த ஆட்சியாளர்கள் நீண்ட காலம் ஆட்சியில் நிலைத்திருக்கவில்லை என்பதை அரசாங்கத்துக்கு நினைவுபடுத்துகின்றோம்.**

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள் ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

விவசாயிகள் அரச நெற்களஞ்சியசாலைகளுக்கு நெல்லை வழங்கினால் மாத்திரமே நிவாரணம் வழங்கப்படும் என்று அரசாங்கம் நிபந்தனையிடுகின்றது. அதிகாரத்தால் ஆணவமடைந்து சில அமைச்சர்கள் இவ்வாறு செயற்படுகின்றனர். இவ்வாறான ஆட்சியாளர்கள் மிகக் குறுகியகாலம் மாத்திரமே ஆட்சியில் இருந்திருக்கின்றார் கள். மக்களின் வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ப சம்பள அதிகரிப்பு வழங்கப்படவில்லை என்பதே உண்மையாகும். ஒரு சந்தர்ப்பத்தில் ஏமாற்றமடைந்ததைப் போன்று மக்கள் மீண்டும் ஏமாறமாட்டார்கள். மக்களை ஏமாற்றியமைக்கான பிரதிபலனை அரசாங்கம் விரைவில் அனுபவிக்கும்-என்றார். (எ-இ)

## வீடொன்றில் 82 கைபேசிகள்; பெண் கைது

கொழும்பு, பெப். 28

பாணந்துறையிலுள்ள வீடொன்றிலிருந்து இருந்து திருடப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் 82 கைபேசிகளுடன் வீட்டின் உரிமையாளரான பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பாணந்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்துள்ளார்.

விசேட சோதனையின் போது வீட்டின் பல்வேறு இடங்களில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 82 கையடக்கத் தொலைபேசிகள் கண்டு பிடிக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.(ச-இ)

## கழுதைகள் இறைச்சியாக்கல் முறியடிப்பு


கொழும்பு, பெப். 28

நுரைச்சோலை நாரக்கல்லிய பகுதியில் சட்டவிரோதமாக ஆறு கழுதைகளை ஏற்றிச்சென்ற 2 பாரவூர்திகள் கைப்பற்றப்பட்டுள்ளன. அவற்றின் ஓட்டுநர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இறைச்சிக்காகக் கழுதைகளை வெட்டுவது குறித்த பகுதியில்நீண்டகாலமாக நடந்துவருவதாகவும், அதிகாரிகளால், குறித்த செயற்பாடு கட்டுப்படுத்தப்படவில்லை என்றும் அந்தப் பகுதி மக்களால் தெரிவிக்கப்படுகின்றது. [illegible]


# மரண அறிவித்தல்

தோற்றம் 21 . 06 . 1949



மறைவு 14 . 02 . 2025

**இராசா சிவபாதம்**

**(ஓய்வு பெற்ற C.T.B ஊழியர் பருத்தித்துறை டிப்போ)**

அச்சுவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட இராசா சிவபாதம் அவர்கள் கடந்த 2025.02.14 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசா-சிவக்கொழுந்து தம்பதியின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற சின்னப்பு-பொன்னம்மா தம்பதியின் மருமகனும் சமரக்கொடி (துரை) அவர்களின் அன்புக் கணவரும் வைகரி, தர்விகா, தீரஜன், நீரஜன் ஆகியோரின் அன்புக் தந்தையும் சுதாகரன், பிரதீபன், ஹம்சத்பிரியா, கஜந்தா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சரிணி, திலக்ஷன், வியோனன், டியானி, யாதவி, அஸ்வந், றியா, றிஷான் ஆகியோரின் அன்புக் தாத்தாவும் காலஞ்சென்ற சிவமணி மற்றும் சிவராணி, இன்பவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெயலிங்கம், சுந்தரலிங்கம், சத்தியவிமலாதேவி, காலஞ்சென்றவர்களான சற்குணராணி, சத்தியேஸ்வரன் மற்றும் கமலேஸ்வரி காலஞ்சென்ற பிறேமநாதன் அபூர்வசூரியா ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் அனுசியா, கிஷாந், சோபிதா ஆகியோரின் தாய் மாமனாரும் காலஞ்சென்ற தம்பித்துரை மற்றும் குகனேஸ்வரன் மங்களேஸ்வரி, ஸ்ரீபவானி ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (02.03.2025) ஞாயிற்றுக்கிழமை இலங்கை நேரப்படி நண்பகல் 12.00 மணிக்கு லண்டனில் நடைபெறும். இறுதி அஞ்சலி பிரார்த்தனை அச்சுவேலி மத்திய கல்லூரி ஒழுங்கையில் அமைந்துள்ள அன்னாரது சகோதரியின் இல்லத்தில் நடைபெறும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

அச்சுவேலி வடக்கு அச்சுவேலி (CS 4445) V-1

க.குகனேஸ்வரன் 074 318 2538

இ.இன்பவதி 077 615 6393


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடைகளின்...

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் மீட்கப்பட்ட உடைகள் தொடர்பான சுூராய்வு அறிக்கை முல்லைத்தீவு நீதிமன்றத்தில் முல்லைத்தீவு சட்டமருத்துவ அதிகாரி வாசுதேவாவால் நேற்றுச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் உடைகளில் 'கைகளால் தைத்து' பொறிக்கப்பட்ட இலக்கங்கள் மற்றும் 'த.வி.பு' என்று குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகள் தொடர்பிலும் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளது என்றும் தெரியவருகின்றது.

**பின்னணி**

கடந்த 2023ஆம் ஆண்டு ஜூன் மாதம் 29ஆம் திகதியன்று, முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் பகுதியில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினர் நீர் இணைப்பினைப் பொருத்துவதற்காக, கனரக இயந்திரத்தின் மூலம் நிலத்தினை அகழ்ந்தபோது மனிதப் புதைகுழியொன்று இனங்காணப்பட்டிருந்தது.

இதனையடுத்து முல்லைத்தீவு நீதிமன்றம், முல்லைத்தீவு சட்டமருத்துவ அதிகாரி ஆகியோரின் கண்காணிப்பு மற்றும் பங்குபற்றுதல்களுடன், தொல்லியல் துறைப் பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினரால் அந்த மனிதப்புதைகுழியில் அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

திட்டமிடப்பட்ட வகையில் பணிகள் முடிவடைந்ததைத் தொடர்ந்து 2024ஆம் ஆண்டு ஜூன் மாதம் அந்தப் புதைகுழி உரிய சட்ட நடவடிக்கைகள் மற்றும் அடையாளப்படுத்தல்களுக்கு அமைய மூடப்பட்டது. அந்தப் புதைகுழியில் மீட்கப்பட்ட உடைகள் தொடர்பான சுூராய்வு அறிக்கையே முல்லைத்தீவு நீதிமன்றத்தில் நேற்றுச் சமர்ப்பிக்கப்பட்டது.

(அ-ம-26)

## தமிழர்களின்...

என்று நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

வரவு - செலவுத் திட்டம் தொடர்பான விவாதம் நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, தமிழர்கள் வழங்கிய வாக்குகளுக்காகவும், அவர்கள் அரசாங்கத்தின்மீது வைத்துள்ள நம்பிக்கைக்காகவும் அரசாங்கம் விரைவாகச் செயற்படவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஈழத்தமிழ் சகோதரர்கள் உங்களை நம்பித்தானே வாக்களித்தார்கள்? இது நல்ல விடயம்தானே? எனவே, அந்த நம்பிக்கையைக் கௌரவப்படுத்துங்கள். தமிழ் மக்களின் நம்பிக்கையைக் காப்பாற்றுவதற்காக மாகாணசபைத் தேர்தலை நடத்துங்கள்.

மாகாணசபைகளுக்கு அதிகாரங்களைப் பகிரவும் அரசாங்கம் முன்வரவேண்டும். அது அடுத்தக்கட்டம் நோக்கிச் செல்வதற்கான ஆரம்பப்புள்ளியாக அமையும் - என்றார். (அ-ம-44)

## குற்றவியல்...

நீதியையும் மூடிமறைப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் உண்மைக்கும், நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழு ஒன்று அமைக்கப்படும் எனவும், இலங்கையில் இடம்பெற்ற வன்முறைகளை விசாரிப்பதற்கான ஆணை அந்த ஆணைக்குழுவுக்கு வழங்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார். இதன்மூலம் உண்மை, நல்லிணக்க ஆணைக்குழுவுக்குள் குற்றவியல் விசாரணையும் உள்ளடங்கியுள்ளதாக ஒரு பொய்யான தோற்றப்பாட்டை அரசாங்கம் உருவாக்க நினைக்கிறது.

ஆனால் உண்மை - நல்லிணக்க ஆணைக்குழுவுக்குள் குற்றவியல் விசாரணை இருக்காது. அவை நீதிமன்றங்கள் ஊடாக நடத்தப்படவேண்டும். அதே சமயம் குற்றவியல் விசாரணை என்பதை அரசாங்கம் திட்டவட்டமாக முன்பே மறுத்திருக்கிறது. ஆக, குற்றவியல் விசாரணையை மூடிமறைப்பதற்கான பிரயத்தனத்தை அரசாங்கம் செய்வதையே காணமுடிகிறது.

எங்களைப் பொறுத்தளவில் குற்றவியல் விசாரணையை உறுதிப்படுத்தாத வெளிவிவகார அமைச்சரின் உரையை அல்லது அந்த உரையில் கூறப்பட்ட ஆணைக்குழு குறித்த கருத்தை நாம் முற்றாக நிராகரிக்கின்றோம். குற்றவியல் விசாரணையும், உண்மை, நல்லிணக்க ஆணைக்குழுவும் சமாந்தரமாக வரவேண்டும்.

பாதிக்கப்பட்ட தமிழ்மக்கள் நீதியையும், பொறுப்புக்கூறலையும் எதிர்பார்த்துள்ள நிலையில் காணாமல் போனோர் அலுவலகம், இழப்பீட்டு அலுவலகம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகம் போன்ற உள்ளகப் பொறிமுறைகள் வலுப்படுத்தப்படுமென அரசாங்கம் தெரிவிப்பது இறுதியில் மன்னிப்பு, இழப்பீடு போன்ற காரணங்களைக் கூறிப் பிரச்சினையை முழுமையாக இல்லாமல் செய்யும் முயற்சியாகவே அமையும் - என்றார். (அ-ம-இ-66)

## மனித...

இலங்கையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் செயற்படும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் தொடர் வன்முறைகள் மற்றும் கண்காணிப்புக்கு உள்ளாகின்றனர் என்று ஐக்கிய நாடுகள் சபையின் விசேட அறிக்கையாளர் மேரி லோலர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 58 ஆவது கூட்டத்தொடர் கடந்த திங்கட்கிழமை ஜெனிவாவில் ஆரம்பமாகியுள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் ட்ரக்கின் இலங்கை தொடர்பான வாய்மொழிமூல அறிக்கை எதிர்வரும் மார்ச் மாதம் 3ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது.

அதேநேரம், இலங்கையில் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் மீது பிரயோகிக்கப்படும் ஒடுக்குமுறைகள் மற்றும் மீறல்கள் பற்றிய விவரங்களை உள்ளடக்கிய விசேட அறிக்கை மார்ச் மாதம் 6ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ளது. இந்த அறிக்கை தொடர்பில் சிறப்பு அறிக்கையாளரான மேரி லோலர் சில கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் மனித உரிமைகள் சார்ந்த செயற்பாட்டாளர்களின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. அதிலும் குறிப்பாக, வடக்கு - கிழக்கு மாகாணங்களில் பணிபுரியும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் தீவிரவாதிகள் என்று முத்திரை குத்தப்படுகின்றனர்.

பல பெண் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் அரசுக்கு எதிரானவர்கள் என முத்திரை குத்தப்பட்டுள்ளனர். அவர்கள் அமைதியான முறையில் போராட்டங்களை முன்னெடுக்கும்போது தாக்குதலுக்கும் உள்ளாகின்றனர் - என்றார். (அ-எ-இ)

## மனித உரிமைச்...

களுக்காக எதிர்காலத்தில் நாம் ஒத்துழைக்கவேண்டிய அவசியமில்லை என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மனித உரிமைகள் ஆணையாளர் காரியாலயம் தற்போது மறுசீரமைப்புக்கு உட்படுத்தப்படவேண்டும். விசேடமாக ஆசிய பிராந்தியத்திலுள்ள காரியாலயத்தில் இந்த மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படவேண்டும். அவர்கள் அரசியல் நிகழ்ச்சி நிரலையே முன்னெடுத்துச் செல்கின்றனர். தங்களுக்குத் தேவையான நபர்களையும் அமைப்புகளையும் ஊக்கப்படுத்தி வருவதுடன், இலங்கை அவர்களது இலக்காக மாறியுள்ளது.

எனவே இலங்கை குறித்து எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவை தீர்மானமொன்றை நிறைவேற்றவுள்ளதால் இது தொடர்பில் இப்போதே இலங்கை அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும். உக்ரைன் - ரஷ்யப் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு அமெரிக்கா முயல்கின்றது. உக்ரைன் ஜனாதிபதி ஷெலன்ஸ்கி ஜனாதிபதித் தேர்தலை நடத்தாதது குறித்து பல ஐரோப்பிய நாடுகள் மௌனமாக உள்ளன.

விடுதலைப்புலிகள் வடக்கில் போரிட்ட போதும் ஜே.வி.பி.யின் கிளர்ச்சியின் காலத்திலும் நாங்கள் தேர்தலை நடத்தியுள்ளோம். அதற்கமைய ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை இலங்கை தொடர்பில் ஒரு நிலைப்பாட்டையும் உக்ரைன் தொடர்பில் வேறு ஒரு நிலைப்பாட்டையும் பின்பற்றுவதையே அவதானிக்க முடிகின்றது- என்றார். (அ-ச-இ)

## வழக்கு...

படவுள்ளது. அரியாலை செம்மணியில் அமைந்துள்ள சிந்துபாத்தி மயானத்தில் புதிய தகன மேடை அமைக்க நல்லூர் பிரதேச சபையால் அண்மையில் குழிகள் வெட்டப்பட்டன. இதன்போது மண்டையோடு உள்ளிட்ட மனித எச்சங்கள் மீட்கப்பட்டிருந்தன. இதுதொடர்பாக உரிய விசாரணைகள் மேற்கொள்ளுமாறு கோரி யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று வியாழக்கிழமை காலை பதில் நீதவான் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கைப் பதில் நீதவான் விசாரணைகள் எதுவுமின்றி இன்று வெள்ளிக்கிழமை வரை ஒத்திவைத்தார். இந்நிலையில் குறித்த வழக்கு இன்றையதினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

யாழ்ப்பாண நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா கடந்தவாரம் சம்பவ இடத்தை நேரடியாகப் பார்வையிட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டவை மனித எச்சங்களா? என்பதை உறுதிப்படுத்தப் பகுப்பாய்வுக்கு அனுப்புமாறும், ஏனைய பகுதிகளை ஸ்கானர் இயந்திர உதவியுடன் முழுமையாகப் பரிசோதனை செய்யுமாறும் அறிவுறுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(அ-ம-20-26-66-125)

## தீவக...

ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்துள்ளன.

யாழ்ப்பாணம் பண்ணையில் அமைந்துள்ள கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்துக்கு முன்பாக காலை 9.30 மணியளவில் ஆரம்பித்த இந்த ஆர்ப்பாட்டம் யாழ்ப்பாணம் சுண்டுக்குளியில் அமைந்துள்ள வடமாகாண ஆளுநரின் அலுவலகம் வரை முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பண்ணையில் அமைந்துள்ள கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்துக்கு முன்பாக இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது, யாழ். மாவட்டக் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் ஜெயராஜசிங்கம் சுதாகரனிடம் தமது கோரிக்கைகள் அடங்கிய மனுவை மீனவர்கள் கையளித்தனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத்தூதரகத்துக்கு முன்னாக இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து, யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளியை மீனவர் சங்கப் பிரதிநிதிகள் நேரடியாகச் சந்தித்துச் சுமார் 45 நிமிடங்கள் வரை கலந்துரையாடியதுடன் தமது கோரிக்கைகள் அடங்கிய மனுவைக் கையளித்தனர்.

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக இடம்பெற்ற போராட்டத்தைத் தொடர்ந்து, யாழ்ப்பாணம் மாவட்ட மேலதிக செயலர் (காணி) க.ஸ்ரீமோகனனை நேரடியாகச் சந்தித்து தமது கோரிக்கைகள் அடங்கிய மனுவை மீனவர்கள் கையளித்தனர்.

அதனைத் தொடர்ந்து சுண்டுக்குளியில் அமைந்துள்ள வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தை மீனவர்கள் சென்றடைந்து அங்கு தமது பேரணியை நேற்றுப் பிற்பகல் 12.30 மணியளவில் நிறைவுசெய்தனர். இதன்போது வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனுக்கான மகஜரை வடக்கு ஆளுநர் செயலக அதிகாரியிடம் மீனவர் சங்கப் பிரதிநிதிகள் நேரடியாகக் கையளித்தனர்.

அதன்பின்னர் மீனவர் சங்கப் பிரதிநிதிகள் சிலர் யாழ்ப்பாணம்-கண்டி நெடுஞ்சாலையில் அமைந்துள்ள தேசியமக்கள் சக்தியின் காரியாலயத்துக்கு நேரடியாகச் சென்று அங்கு கடற்றொழில் நீரியல்வள அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரருக்கான மகஜரை ஆளும் கட்சியின் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரனுடன் கலந்துரையாடிய பின்னர் கையளித்தனர். மகஜரைப்பெற்றுக்கொண்ட இளங்குமரன் கடற்றொழில் அமைச்சர் ஊடாகக் குறித்த மகஜரை உடன் ஜனாதிபதிக்கு அனுப்பி வைப்பதுடன் மீனவர்களின் கோரிக்கைகளையும் எடுத்துரைப்பதாக உறுதியளித்தார்.

இந்த ஆர்ப்பாட்டங்களில் 25க்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர் அமைப்புக்களைப் பிரதிநிதித்துவப்படும் வகையில் 500க்கும் மேற்பட்ட மீனவர்கள் கலந்துகொண்டனர். (அ-ம-20-66-125-26)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வரலாற்றுச் சிறப்பு மிக்க கீரிமலை நகுலேஸ்வரம் நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வர சுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவின் தீர்த்தோற்சவம் நேற்று வியாழக்கிழமை காலை கீரிமலை கண்டகி தீர்த்தக் கடலில் ஆயிரக்கணக்கான அடியவர்களின் பங்கேற்புடன் இடம்பெற்றது. (ச-66)

# அத்துமீறிய மீன்பிடிப் பிரச்சினைக்கு உடனடி நடவடிக்கைகள் வேண்டும்!

## 'உதயனின்' செய்தியை மேற்கோள்காட்டி தமிழக முதல்வருக்கு விக்னேஸ்வரன் கடிதம்



ஈழ, தமிழக மீனவர்களுக்கு இடையிலான நட்புறவையும், சகோதரத்துவத்தையும் மேம்படுத்தும் விதமாக பாக்குநீரினை கடற்பரப்பில் அத்துமீறிய மீன்பிடியைத் தடை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும், வடமாகாண முன்னாள் முதலமைச்சருமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்குக் கடிதம் அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தின் சாராம்சமாவது:-

ஜனவரி மாதம் 17ஆம் திகதிய உதயன் உள்ளூர்ப் பத்திரிகையில் 'இந்திய மீனவர்களால் தொடர்கிறது அட்டூழியம் வடமராட்சி மீனவர்கள் வேதனை' என்ற தலையங்கம் கொண்ட செய்தியை வாசித்தேன். இந்தப் பிரச்சினை நேற்று இன்றையதல்ல. பல வருட காலமாக தீர்வின்றித் தொடரும் ஒரு தொடர்கதை.

நான் முதலமைச்சராக இருந்தபோது (20132018) டெல்லியில் இருந்து வந்த ஒரு தமிழ் உயர் அதிகாரியுடன் இது பற்றிப் பேசும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது.

நாங்கள் எங்களின் பேச்சுவார்த்தையின் பின்னர் சில முடிவுகளுக்கு வந்தோம். மக்கள் இடர் தீர்க்கும் முதலமைச்சராகிய உங்களுக்கு அந்த முடிவுகள் எமது மீனவர் பிரச்சினையைத் தீர்க்க உதவியாக இருப்பன என்ற நம்பிக்கையில் அவற்றை இங்கே சுருக்கமாகத் தருகின்றேன்

தமிழ் நாட்டு மீனவர்களுக்கும் வடமாகாணத் தமிழ் மீனவர்களுக்கும் இடையில் நூற்றாண்டு கால தோழமை, அன்னியோன்யங்கள், உறவுமுறைகள் தொடர்ந்து இருந்து வருகின்றன. இழுவைப் படகுகள் பாவனைக்கு வரும் வரையில் இவர்களின் உறவுகள் மிக சுமூகமாய் இருந்து வந்தன. இழுவைப்படகுகள் வந்ததும் நிலைமை மோசடைந்தது. அதிகாலையில் தமிழ்நாட்டுக் கரைகளுக்குத் திரும்பிய இழுவைப் படகுகள் கடல்மாதாவுக்கும், கடல் மீன்களுக்கும் மற்றும் கடல் வாழ் ஏனைய உயிரினங்களுக்கும் ஏற்படுத்திய அட்டூழியங்களை வீடியோ மூலம் அம்மையாரும் நானும் கண்ணுற்றதும் திடுக்கிட்டோம்;, திகைப்புற்றோம். தற்போது தமிழ்நாட்டு கரையோரக் கடல் வளங்கள் முற்றும் முழுதுமாகச் சூறையாடப்பட்ட நிலையில் இருப்பதைப் புரிந்து கொண்டோம். இதற்குக் காரணம் இழுவைப் படகுகளே என்ற முடிவுக்கு வந்தோம். இவற்றின் பாவனை தொடர்ந்தால் இலங்கையின் கரையோரக் கடல்ப்புறங்களும் மொட்டை நிலையை அடைந்துவிடுவன என்பதை அவதானித்தறிந்து கொண்டோம்.

ஆகவே பாக்கு நீரிணையில் இருநாடுகளினதும் இழுவைப் படகுகளின் பாவனை முற்றாகத் தடைப்படுத்தப்பட வேண்டும் என்ற முடிவுக்கு வந்தோம். அவை வங்காளவிரிகுடாவில் அல்லது செங்கடலில் தாராளமாக நாள்கள் கணக்கில் நங்கூரமிட்டு நின்று மீன் பிடிக்கலாம் என்று முடிவெடுத்தோம்.

பாக்கு நீரிணையில் மீன்பிடிக்கும் இழுவைப் படகுகள் ஆழ்கடலில் மீன்பிடிக்கச் செல்ல சில கட்டமைப்பு மாற்றங்களுக்கு உள்ளாக்கப்பட வேண்டுவன. அவற்றை இரு தரப்பு இழுவைப் படகு உரிமையாளர்கள் செய்து முடித்து இழுவைப் படகுகளை ஆழ்கடலுக்கு அனுப்ப வேண்டிய அனுசரணைகளை இருதரப்பு அரசாங்கங்களும் செய்து கொடுக்க வேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டது. இதுபற்றி அப்போதைய தமிழ்நாடு அரசாங்கத்துக்கும் இலங்கையின் மத்திய அரசாங்கத்துக்கும் தெரிவிக்கப்பட்டது. அவற்றைத் தற்போது உங்களின் கவனத்துக்கும் கொண்டு வருகின்றேன் என்றவாறாக அமைந்துள்ளது.

(ம-26)



## யுவதியொருவர் சடலமாக மீட்பு

கொழும்பு, பெப். 28

புத்தளம்கல்லடிப்பிரதேசத்திலுள்ள வீடொன்றி லிருந்து யுவதி ஒருவர் மர்மமான முறையில் உயிரிழந்த நிலையில்மீட்கப்பட்டுள்ளார் என புத்தளம் தலைமையகப் பொலிஸார் தெரிவித்துள்ளார்.

புத்தளம் கல்லடிப் பிரதேசத்தைச்சேர்ந்த19வயதுடைய யுவதியேஉயிரிழந்துள்ளார். யுவதியின் உடற்பாகங்கள் அரசபகுப்பாய்வுத்திணைக்களத்துக்குப்பரிசோதனைகளுக்காக அனுப்பிவைக்கப் பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

---

### நாடளாவிய...

நண்பகல் 12 மணிமுதல் ஒரு மணிவரையான காலப்பகுதியிலேயே அவர்கள் இந்தப் பகுதிநேர (அடையாள) கவனவீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டனர்.

தற்போதைய அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டுள்ள புதிய வரவு-செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டுள்ள போதிலும், மருத்துவ ஊழியர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். எனவே, இவ்வாறான பாரபட்சங்கள் இல்லாமல், மருத்துவ ஊழியர்கள், தாதியருக்கும் ஊதிய உயர்வு மற்றும் மேலதிகநேரக் கொடுப்பனவு வழங்கப்படவேண்டும் என்றும் அவர்கள் தமது போராட்டத்தின்போது வலியுறுத்தியுள்ளனர்.

தமது கோரிக்கைகளை அரசாங்கம் விரைந்து நிறைவேற்றவேண்டும் என்றும், இல்லாவிட்டால் தேசிய ரீதியிலான தமது போராட்டம் தொடரும் என்றும் மருத்துவ ஊழியர்கள் மற்றும் தாதியர்கள் தொழிற்சங்கம் எச்சரித்துள்ளது.

இந்தப் போராட்டம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை, வவுனியா மருத்துவமனை, மன்னார் மருத்துவமனை, முல்லைத்தீவு மருத்துவமனை, கிளிநொச்சி மருத்துவமனை உள்ளிட்ட வடமாகாணத்தின் அனைத்து அரச மருத்துவமனைகளிலும் இடம்பெற்றது.

(அ-ம-125-26-27-20)

### தேர்தல்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாகாணசபைத் தேர்தலை நடத்தும் முடிவில் உறுதியுடன் உள்ளோம். இந்த வருடத்தின் முடிவில் அல்லது அடுத்த வருடத்தின் ஆரம்பத்தில் மாகாண சபைத் தேர்தல் நிச்சயம் நடத்தப்படும். அத்துடன், உள்ளூராட்சித் தேர்தலை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு அரசாங்கம் தயார் நிலையில் உள்ளது - என்றார்.

(அ-ம-44)

### மருத்துவர்கள்...

நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்தப் போராட்டம் காரணமாக நோயாளர்கள் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர்.

இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக அவசர சிகிச்சைகள் தவிர்ந்த இதர மருத்துவ சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இதனால் மருத்துவமனைக்குச் சென்ற பெருமளவு நோயாளர்கள் சிகிச்சை பெறாமல் திரும்பிச் சென்றமையையும் அவதானிக்கமுடிந்தது.

(அ-ம-125-26)

### தொழிற்சங்கப்...

வில் முடிவுக்குவரும் என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

போராட்டத்தை மேற்கொண்டுவரும் தரப்புகளுடன் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. இயல்பு நிலையை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன என்றும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மேலும் கூறியுள்ளார்.

(அ-ம-26)

**வீடு வாடகைக்குண்டு**

யாழ் மருத்துவ பீடத்துக்கு அண்மையில் உள்ள கஜன் திருமண மண்டபத்துக்கு அருகில் உள்ள வீடு வாடகைக்குண்டு

தொடர்புகளுக்கு:

**077 610 9910**

**விற்பனைக்குண்டு**

டீசல் இஞ்சின் விற்பனைக்குண்டு



தொடர்பு: **075 475 7056, 077 986 3089**

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் ... இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.02.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org